சுருக்கம்

தொழில் – விதி 110ன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு – ராமநாதபுரம் மாவட்டம், திருவாடானை வட்டத்தில் தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தால் (சிப்காட்) ஒருங்கிணைந்த ஜவுளிப்பூங்கா Integrated Textile Processing Park ஒன்று 150 கோடி ரூபாய் மதிப்பில் சுமார் 224 ஏக்கர் நிலப்பரப்பில் அமைத்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

தொழில் (எம்.ஐ.எப்.2) துறை

அரசாணை (நிலை) எண்.238 நாள் : 30.09.2015

மன்மத, புரட்டாசி –13

திருவள்ளுவர் ஆண்டு 2046

**ஆணை:**

29.09.2015 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விதி 110–ன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொழில் வளர்ச்சிக்காக கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்:

ராமநாதபுரம் மாவட்டம், திருவாடானை வட்டத்தில் தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தால் (சிப்காட்) ஒருங்கிணைந்த ஜவுளிப்பூங்கா Integrated Textile Processing Park ஒன்று 150 கோடி ரூபாய் மதிப்பில் சுமார் 224 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்படும். இப்பூங்காவில் நாளொன்றுக்கு ஒரு கோடி லிட்டர் திறனுள்ள, கடல் நீர் சுத்திகரிப்பு ஆலை ஒன்று நிறுவப்படும். இப்பூங்காவில் இடம் பெறும் 30 ஜவுளித்துறை தொழில் நிறுவனங்கள் சுமார் 450 கோடி ரூபாய் செலவில் அமையப் பெறும். இவற்றின் மூலம் 6,000 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பு உருவாகும். மத்திய அரசின் மானியமாக 70 கோடி ரூபாயும், சிறப்பு நோக்க முகமையில் பங்கு தொகையாக 40 கோடி ரூபாயும், மாநில அரசு மற்றும் சிப்காட் நிறுவனத்தின் 40 கோடி ரூபாயும் திட்ட நிதியாக இருக்கும்.

2. மேற்காணும் திட்டத்தினை குறிப்பிட்ட கால அளவிற்குள் நடைமுறைப்படுத்தவும் இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கு தேவைப்படும் நிதியினை மத்திய அரசின் மானியமாகவும் சிறப்பு நோக்க முகமையின் பங்கு தொகையாகவும் மாநில அரசு மற்றும் சிப்காட் நிறுவனத்தின் திட்ட நிதியாக பெறுவதற்கும் உரிய நடவடிக்கையினை எடுக்குமாறும் இத்திட்டத்தினை செயல்படுத்துவதில் ஏற்படும் முன்னேற்றம் குறித்து அரசுக்கு அறிக்கை அனுப்புமாறும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்) அவர்களை அரசு பணிக்கிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ச. வி. சங்கர்

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்

மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்),
19–ஏ, ருக்குமணி இலட்சுமிபதி சாலை, எழும்பூர், சென்னை–600 008.

நகல்

கைத்தறி, கைவினை மற்றும் கதர் துறை, சென்னை–600 009.
சிறப்புத் திட்டங்கள் அமலாக்கத்துறை, சென்னை–600 009.
தொழில் (அ.ந.மு.2/வ.செ.தி.1) துறை, சென்னை– 600 009.
இ.கோப்பு/உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்